MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY AT ARASAMPALAYAM VILLAGE, KINATHUKADAVU TALUK, COIMBATORE DISTRICT COVERING OVERALL EXTENT OF 3.00.0 Ha ON 15.09.2022 AT 11.00 A.M AT M/S. PRS THIRUMANA MANDAPAM, ELUR PIRIVU, ELUR, COIMBATORE-POLLACHI MAIN ROAD, COIMBATORE DISTRICT.

Name of the Project:

Proposed Rough Stone and Gravel Quarry at Arasampalayam Village Kinathukadavu Taluk, Coimbatore District covering overall extent of 3.00.0 Ha. However the total area of the quarries located within 500m radius from the said quarry exceeds over an extent of 5.00.0 hectares.

1. M/s.C.Vijay Rough Stone & Gravel Quarry, S.F. No. 161A/2 & 162A/1 (Part) of Arasampalayam Village, Kinathukadavu Taluk, Coimbatore District	Proposed Rough Stone & Gravel quarry over an extent of 3.00.0 Ha.

Present:

1.	Ms.S.Selva Surabi	:	District Revenue Officer, Stamps, Coimbatore District.
2.	Dr. R.Chandrasekaran	:	District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Coimbatore South.
3.	Dr.N.Rajkumar	:	Assistant Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Coimbatore South.
4.	Thiru.S.Prabhu	:	Assistant Engineer, TamilNadu Pollution Control Board, Coimbatore South.
5.	Thiru. C.Vijay	:	Proprietor, M/s C.Vijay Rough Stone and Gravel Quarry
6.	Thiru.M.Shaik Nawas	:	EIA Consultant M/s. GEO Exploration and Mining Solutions, Salem.
	Public	:	46 Nos. (List enclosed as Annexure)

****

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the District Revenue Officer (Stamps), Coimbatore District, other Officials, all general public and project proponents who have attended the public hearing for the proposed Rough Stone and Gravel Quarry at Arasampalayam Village Kinathukadavu Taluk, Coimbatore District covering overall extent of 3.00.0 Ha namely **Thiru. C.Vijay Rough Stone and Gravel Quarry** at S.F. No: 161A/2 & 162A/1 (Part), Arasampalayam Village, Kinathukadavu Taluk, Coimbatore District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinathanthi" and "Times of India" dated 13.08.2022 and 30 days time was given. He also pointed out the EIA report and Executive summary are made available for public reference at respective Offices. He further informed that the project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views and suggestions.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography / Audio and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority of Tamil Nadu.

The District Revenue Officer (Stamps), Coimbatore District has initiated the Public Hearing process. The District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project through power point presentation regarding Rough Stone and Gravel Quarry at Arasampalayam Village, Kinathukadavu Taluk, Coimbatore District covering overall extent of 3.00.0 Ha and requested the public to register their views after presentation.

Thereafter, Thiru.M.Shaik Nawas, EIA Consultant, M/s. Geo-Exploration and Mining Solutions, Salem consultant of the proposed Rough Stone and Gravel Quarry (1 No.) project has made presentation about the proposed Rough stone & Gravel Quarry project to the public along with Environmental Management Plan.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public and the participants to express their views and comments about the proposed Rough Stone and Gravel Quarry projects. The views and suggestions of the public are detailed below:

1. **Mr. M.Sundararaj, Karachery, President of Arasampalayam Panchayat:**

He stated that availability of mines reserve is natural gift by nature. The public in Arasampalayam Village are getting job opportunities due to functioning of existing quarries in their area. Twenty years back the public from Arasampalayam Panchayat employed in other villages. Due to existence of this rough stone quarries, local people are employed in their village itself. Also he added that there

are around 15-20 quarries in that area and some are not functioning due to expiry of lease. The Panchayat also generates revenue from these rough stone quarries and the same is being utilized for public works. The quarry owners are contributing for the development of existing Government School in Arasampalayam. He further stated that there is no damage in the village due to this quarry and hence requested to permit the quarry which in turn will help for the development of their village.

2. Tmt. Chinna Kunjal, Myleripalayam:

She stated that she worked in quarries and her family members are depending on the income received from the job in quarry. They are not able to fulfil the needs since the quarries are not functioning. They are fulfilling their daily needs. She requested to permit the quarry so that the people in that area depending on quarries will get job opportunities.

3. Thiru.Ramaraj, Arasampalayam Village:

He informed that his family is depending on the quarry jobs for their basic needs and requested to permit the quarry.

4. Thiru.Padmanathan , Myleripalayam Village:

He informed that earlier he worked as driver in this quarry. Since the quarry is not functioning, now he has worked as driver in other places which is away from his native. So to get job opportunity, he requested the officials to permit the quarry.

5. Thiru.Balaganesan, Myleripalayam:

He stated that he worked in this quarry earlier. He has stated that he travels long distances for job for the last one year, since the quarry is not functioning. Also he informed that family situations not allowing for long travels. He requested the officials to permit the quarry early.

6. Thiru.Sudarshan, NGO:

He stated that today unemployment is the major problem in India. He said that he is supporting the project and informed that the project can be carried out without harming the environment and to provide employment to the local public. The added that more trees have to be grown more in the proposed site, CSR funds will be utilized for primary education.

7. Thiru.Mageshkumar, Eachanari:

He informed that there is more demand for the building materials in last few years. He has invested and involved in doing business related to building materials. He requested to issue license to the quarry.

8. Thiru.M. Maheshkumar, Arasampalayam:

He informed that his lands are located near the proposed quarry site and he is degree holder and involved in quarry related activities for his basic needs. He is doing businesses related to transport blue metals which will be utilized in crushers or quarries. He added that the quarry is an alternative to agriculture in his area. As this quarry is not functioning at present, there is demand for building materials. So he requested the officials to allow the quarry at the earliest.

Subsequently the District Environmental Engineer, TNPCB, Coimbatore South requested the public to give the written petitions/ representations regarding the proposed project. The District Revenue Officer, Coimbatore District received the written petitions from the public.

9. Thiru.Kathirvel, Karachery, Arasampalayam Village:

He informed that he is residing near the quarry area and having three lorries which were operated in quarries and involved in his business by depending on the quarries. Since this quarry is not functioning, he is operating his lorries for other activities. He has requested to issue license to the quarry at the earliest.

10. Thiru.Karthikeyan, Arasampalayam:

He introduced one another person named Thiru.Rasu, who earlier involved in compressor operation business in this quarry. He added that Thiru.Rasu is unable to pay the college fees of his children due to unemployment since this quarry is not in operation for the past one year. Thiru.Karthikeyan also requested the officials to permit the quarry at the earliest.

11. Thiru.Silambarasan, Pudukottai:

He stated that he is hailing from Pudukottai District and he came to Arasampalayam Village based on employment opportunities provided at KRK crusher owned by this quarry owner. He further informed that he worked as cleaner in the lorries operated at KRK crusher which is not operated due to non operation of the quarry. He also requested to do the needful to operate the quarry soon.

The District Environmental Engineer requested the public to register their suggestions. The District Environmental Engineer requested the consultant regarding the existing green belt provided by the quarry site, as the quarry already exists. The consultant informed that the unit quarry owner has proposed to plant 1500 saplings for the green belt development around the quarry area. Also he informed that there is green belt which is already developed by the quarry. Further District Environmental Engineer informed the consultant to submit the compliance report for the Environmental Clearance already issued to the quarry which has expired.

The Assistant Environmental Engineer, TNPCB, Coimbatore South delivered vote of thanks and the proceedings came to end.

List of publics attended the public hearing meeting along with photographs and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

District Environmental Engineer
Tamilnadu Pollution Control Board
Coimbatore South

District Revenue Officer
Stamps
Coimbatore District

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், அரசம்பாளையம் கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி (மொத்த பரப்பளவு 3.00.00 ஹெக்டெர்ஸ்) திட்டத்திற்கு கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி ரோடு, ஏலூர் பிரிவில் அமைந்துள்ள தி/ள் பி.ஆர்.எஸ் திருமண மண்டபத்தில் 15.09.2022 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

திட்டத்தின் பெயர்

உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி, அரசம்பாளையம் கிராமம், கிணத்துக்கடவு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் (மொத்த பரப்பளவு 3.00.00 ஹெக்டெர்ஸ் பரப்பளவு)

1. தி/ள். சி. விஜய் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி, க.ச.எண் : 161A/2 & 161A/1 (பகுதி), அரசம்பாளையம் கிராமம், கிணத்துக்கடவு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.	உத்தேசிக்கப்பட்ட ரப்ஸ்டோன் குவாரி 3.00.00 ஹெக்டெர்ஸ் பரப்பளவு

பங்கேற்றோர்:

1	திருமதி. S. செல்வ சுரபி	:	மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) கோயம்புத்தூர் மாவட்டம்.
2	Dr. R. சந்திரசேகரன்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு
3	Dr. N. ராஜ்குமார்	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு
4	திரு. S. பிரபு	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு
5	திரு. C. விஜய்	:	உரிமையாளர் (தி/ள். விஜய் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி)
6	திரு.M. ஷேக் நவாஸ்	:	சுற்று சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், தி/ள் ஜியோ எக்ஸ்புலோரேசன் அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு.
பொதுமக்கள்		:	46 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

******

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், அரசம்பாளையம் கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். C. விஜய் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி (1 எண்ணிக்கை), க.ச.எண் 161A/2 & 161A/1 (பகுதி), அரசம்பாளையம் கிராமம், கிணத்துக்கடவு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் (மொத்த பரப்பளவு 3.00.00 ஹெக்டெர்ஸ்) திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) திருமதி. S. செல்வ சுரபி, மற்றும் வருவாய்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006–ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆகிய நாளிதழ்களில் 13.08.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார். மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை பதிவு செய்யலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களால்

உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரையை வழங்கும்படி திட்ட ஆலோசகரிடம் கூறினார்.

அதனை தொடர்ந்து தி/ள். C. விஜய் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M. ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோ எக்ஸ்புலோரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி (1 எண்ணிக்கை) திட்டங்கள் குறித்த பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் சந்தேகங்கள் கேட்கலாம் என கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

பொதுமக்கள் கருத்துக்கள் :

1. **திரு. M. சுந்தரராஜ், காரச்சேரி, அரசம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் அவர்கள்:**

சுரங்க இருப்பு இருப்பது இயற்கையின் கொடை என்று கூறினார். அரசம்பாளையம் கிராமத்தில் தற்போதுள்ள குவாரிகள் செயல்படுவதால் அங்குள்ள பொதுமக்கள் அனைவரும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு முன், அரசம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள், வேறு கிராமங்களில் வேலைவாய்ப்பு பெற்று பணிபுரிந்து வந்தனர், தற்போது ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிகள் இங்கேயே இருப்பதால் உள்ளூர் மக்கள் தங்கள் கிராமத்திலேயே குடும்பத்துடன் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள். மேலும் 15–20 குவாரிகள் அக்கிராமத்தில் உள்ளதாகவும், குத்தகை காலவதியானதால் சில குவாரிகள் செயல்படவில்லை என்றும் அவர் கூறினார். இங்கு செயல்படும் குவாரிகள் மூலம் அரசம்பாளையம் ஊராட்சிக்கு வருமானம் கிடைப்பதோடு பொதுப்பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், அரசம்பாளையத்தில் உள்ள அரசு பள்ளிக்கு குவாரிகளின் உரிமையாளர்கள் அதன் மேம்பாட்டுக்காக பெரிதும் உதவி செய்கின்றனர்.

மேலும் அவர் இந்த குவாரியால் கிராமத்தில் எந்த வித பாதிப்பும் இல்லை என்றும், தங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்றும் குவாரிக்கு அனுமதி வழங்குமாறும் கேட்டு கொண்டார்,

2. **திருமதி. சின்ன குஞ்சாள், மைலேரிபாளையம் :**

தான் குவாரிகளில் பணிபுரிந்து வந்ததாகவும், குவாரியில் வேலை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பியே தனது குடும்பம் இருப்பதாகவும் அவர் கூறினார். குவாரிகள் செயல்படாததால், தற்போது வாழ்க்கை நடத்துவது சிரமமாக உள்ளது என்றும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை என்று சொன்னார். எனவே இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டு கொண்டார்,

3. **திரு. ராம்ராஜ், அரசம்பாளையம் கிராமம் :**

தனது குடும்பம் குவாரியில் வேலை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பி தான் உள்ளது. எனவே, குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டு கொண்டார்,

4. **திரு. பத்மநாபன், மைலேரிபாளையம் கிராமம் :**

தான் இந்த குவாரியில் முன்பு டிரைவராக பணிபுரிந்து வந்ததாக தெரிவித்தார். குவாரி செயல்படாததால், தற்போது சொந்த ஊரை விட்டு வேறு இடங்களில் டிரைவராக பணியாற்றி வருவதாக கூறினார். எனவே, வேலை வாய்ப்பு கிடைக்க குவாரிக்கு அனுமதி வழங்க அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

5. **திரு. பாலகணேஷன், மைலேரிபாளையம் :**

இந்த குவாரியில் தான் முன்பு பணிபுரிந்ததாக தெரிவித்தார். இக்குவாரி செயல்படாததால் கடந்த ஓராண்டாக வேலைக்காக நீண்ட தூரம் பயணம் செய்வதாகவும் கூறினார் குடும்ப சூழ்நிலை காரணமாக வெளியூர் செல்ல இயலவில்லை. எனவே, வேலை வாய்ப்பு கிடைக்க குவாரிக்கு அனுமதி வழங்க அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

6. **திரு. சுதர்சன், NGO :**

இன்று இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் தான் பெரும் பிரச்சினையாக உள்ளது என்று கூறினார். இத்திட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்த அவர், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்

இத்திட்டத்தை மேற்கொள்ளவும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விதமாக நிறைவேற்றுமாறு தெரிவித்தார். கல் குவாரியை சுற்றிலும் போதுமான அளவில் உயரமான மற்றும் அடர்த்தியான மரங்கள் வளர்க்க வேண்டும் என்றும், ஆரம்பக் கல்விக்காக CSR நிதி பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

7. **திரு. மகேஷ்குமார், ஈச்சனாரி :**

கடந்த சில ஆண்டுகளாக கட்டுமானப் பொருட்களுக்கான தேவை அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். தான் கட்டுமான பொருட்கள் தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அதில் முதலீடு செய்திருப்பதால் விரைவில் குவாரிக்கு உரிமம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

8. **திரு. M. மகேஷ்குமார், அரசம்பாளையம் :**

இவர் தனது நிலம் அமையவுள்ள குவாரிக்கு அருகாமையில் அமைந்துள்ளதாகவும், தான் படித்த பட்டதாரி என்றும் தனது அடிப்படைத் தேவைகளுக்காக குவாரி தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வருவாதாகவும் தெரிவித்தார். கிரஷர்கள் மற்றும் குவாரிகளில் உற்பத்தி செய்யப்படும் ஜல்லிகள் அல்லது லாரிகள் தொடர்பான தொழில்களில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் இவர் கூறுகையில் இந்த குவாரியானது விவசாய தொழிலுக்கு மாற்று தொழிலாக இப்பகுதியில் உள்ளது என்றும் தெரிவித்தார். தற்போது இந்த குவாரிகள் செயல்படாததால், கட்டுமான பொருட்களுக்கான தேவை அதிகமாகியுள்ளது. எனவே, குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் (தெற்கு) அவர்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த குவாரி தொடர்பான எழுத்து பூர்வமான மனுக்களை அளிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். கோவை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் பொதுமக்களின் எழுத்துப்பூர்வ மனுக்கள் பெறப்பட்டது.

9. **திரு. கதிர்வேல், சாரச்சேரி, அரசம்பாளையம் கிராமம் :**

தான் இந்த கல் குவாரிக்கு அருகாமையில் வசிப்பதாகவும், குவாரிகளை நம்பி மூன்று லாரிகளை வைத்து தொழில் செய்வதாக கூறினார். இந்த குவாரி செயல்படாததால் வேறு பணிகளுக்கு லாரிகளை இயக்கி வருவதாக

தெரிவித்தார். எனவே விரைவில் குவாரிக்கு உரிமம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

10. **திரு. கார்த்திகேயன், அரசம்பாளையம் :**

இவர் இந்த குவாரியில் முன்பு கம்ப்ரஷர் ஆபரேட்டர் தொழிலில் ஈடுபட்டு வந்த திரு. ராசு என்பவரை கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தினார். கடந்த ஓராண்டாக இந்த குவாரி செயல்படாததால் வேலைவாய்ப்பு இல்லாமல் திரு. ராசு தனது குழந்தைகளின் கல்லூரிக் கட்டணம் கூட செலுத்த முடியாமல் சிரமப்படுவதாக தெரிவித்தார். எனவே, வேலைவாய்ப்பு பெற விரைவில் குவாரிக்கு உரிமம் வழங்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் திரு. கார்த்திகேயன் கேட்டுக் கொண்டார்.

11. **திரு. சிலம்பரசன், புதுக்கோட்டை :**

நான் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் இந்த குவாரி உரிமையாளருக்குச் சொந்தமான KRK கிரஷரில் பெற்ற வேலை வாய்ப்பின் அடிப்படையில் தான் அரசம்பாளையம் கிராமத்திற்கு வந்ததாக கூறினார். மேலும் தான் KRK கிரஷரில் இயக்கப்பட்டு வந்த லாரிகளில் கீளினராக பணிபுரிந்து வந்ததாகவும், தற்போது இக்குவாரி இயங்காததால் லாரிகளும் இயங்கவில்லை என்று தெரிவித்தார். மேலும் வேலைவாய்ப்பு வேண்டி குவாரியை விரைவில் இயக்க அனுமதி தர வேண்டும் என்று கூறினார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். குவாரி ஏற்கனவே உள்ளதால், கல் குவாரியை சுற்றிலும் போதுமான அளவில் உயரமான மற்றும் அடர்த்தியான மரங்கள் நட்டு பசுமை போர்வை (Green Belt) அமைத்திட வேண்டும் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் ஆலோசகரிடம் கூறினார். குவாரியை சுற்றிலும் பசுமை போர்வை மேம்பாட்டிற்காக 1500 மரக்கன்றுகளை நடப்படும் என்று திட்ட ஆலோசகர் தெரிவித்தார். ஏற்கனவே, குவாரி மூலம் உருவாக்கப்பட்ட பசுமை போர்வை உள்ளது என்றும் குவாரி உரிமையாளர் தெரிவித்தார். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் குவாரி உரிமையாளரிடம் ஏற்கனவே அரசால் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதிக்கான லைசென்ஸ் முடிவுற்ற நிலையில் அதில் வழங்கப்பட்ட நிபந்தனைகைள்

நிறைவேற்றப்பட்டதற்கான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆலோசகரிடம் தெரிவித்தார்.

கோயம்புத்தூர் தெற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் நன்றியுரை வழங்கினார். கூட்ட நிகழ்வுகள் நிறைவடைந்தது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
கோயம்புத்தூர் தெற்கு

மாவட்ட வருவாய் அலுவலர்
(முத்திரை)
கோயம்புத்தூர் மாவட்டம்